Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 242 | உள்ளூர் - 30.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 242 | வெளியூர் - 31.08.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


உங்க ராசி சொல்லுங்க... செப்டம்பர் பலன் இதோ!

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தில் வேலை!

நேபாள வெள்ளம்: 626 பேர் பலி; 3,000 பேர் மாயம்!

தி.மு.க.வில் புதிய பாய்ச்சல்!

## ஜி.எஸ்.டி. கவுன்சில் செப். 12-ல் கூடுகிறது!



புதுடெல்லி, ஆக. 30–

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில், ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம் வருகிற செப்டம்பர் 12–ந் தேதி டெல்லியில் நடைபெற உள்ளது. அனைத்து மாநிலங்களின் நிதி அமைச்சர்களும் இடம்பெற்றுள்ள இந்த கவுன்சில், ஓராண்டுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு கூடுகிறது.இதற்கு முன்பு, கடந்த 2026–ம் ஆண்டு செப்டம்பர் 3, 4–ந் தேதிகளில் 56–வது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில், ஜி. எஸ்.டி. வரி விகிதங்கள் மற்றும் வரி அடுக்குகளில் மிகப்பெரிய மாற்றங்களை மேற்கொள்ள மத்திய அரசும், மாநில அரசுகளும் முடிவு செய்தன.

அதன்படி, ஜி.எஸ்.டி. வரி விகிதங்கள் 5 மற்றும் 18 சதவீதம் என 2 அடுக்குகளாக மாற்றப்பட்டன. மிகவும் ஆடம்பரமான பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கு மட்டும் அதிகபட்சமாக 40 சதவீதம் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டது. முன்னதாக 5, 12, 18 மற்றும் 28 சதவீதம் என 4 வரி அடுக்குகள் நடைமுறையில் இருந்து வந்தன. இந்த நிலையில், ஜி.எஸ்.டி. கவுன்சிலின் அடுத்த கூட்டம் வருகிற செப்டம்பர் 12–ந் தேதி டெல்லியில் நடைபெற உள்ளது.

## மத்திய பட்ஜெட் தயாரிப்பு பணி அக்டோபர் 12-ந்தேதி தொடக்கம்!




புதுடெல்லி, ஆக. 30–

2027–28–ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தயாரிப்பு பணிகள் அக்டோபர் 12–ந்தேதி தொடங்குகின்றன. இதுதொடர்பாக நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் பட்ஜெட் பிரிவு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி, செலவினத்துறை செயலாளர் வி.வுவல்னம் தலைமையில் அமைச்சகங்கள் மற்றும் துறைகளுடன் முன்கூட்டிய பட்ஜெட் ஆலோசனைக் கூட்டங்கள் அக்டோபர் 12–ந்தேதி முதல் தொடங்குகிறது.

இந்தக் கூட்டங்களில் துறைகளின் நிதி தேவை, ஏற்கனவே செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான செலவு, புதிய திட்டங்களுக்கான நிதி தேவை, வருவாய் நிலவரம் மற்றும் நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்படும். அமைச்சகங்கள் மற்றும் துறைகள் தேவையான விவரங்களை அக்டோபர் 6–ந்தேதிக்குள் யூனியன் பட்ஜெட் தகவல் அமைப் பில் (யு.பி.ஐ.எஸ்.) பதிவு செய்ய வேண்டும்.

செப்டம்பர் 30–ந்தேதி வரையிலான செலவுகள், முந்தைய ஆண்டின் செலவுகள், நிலுவையில் உள்ள பில்கள் மற்றும் பயன்படுத்தப்படா மல் உள்ள நிதி ஆகியவற்றை கணக்கில் கொண்டு மதிப்பீடு களை தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், முதலில் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெறும் செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும், அதன்பிறகே புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி அல்லாத வருவாயில் வசூலிக்க ப்படாமல் உள்ள நிலுவைத் தொகைகளை மீட்க நடவடிக்கை எடுக்கவும், அரசு சேவைகளுக்கான கட்ட ணங்களை மாற்றுவதற்கான வாய்ப்புகளை ஆய்வு செய்யவும் அமைச்சகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்கூட்டிய ஆலோசனைகளுக்குப் பிறகு துறைகளுக்கான தற்காலிக செலவின வரம்புகள் நிர்ணயிக்கப்படும்.

பின்னர் அரசின் செலவின முன்னுரிமைகள் மற்றும் வருவாய் நிலவரத்தை கருத்தில் கொண்டு இறுதி வரம்புகள் நிர்ணயிக்கப்படும். இந்தப் பணிகள் டிசம்பர் இறுதிக்குள் அல்லது 2027–ம் ஆண்டு ஜனவரி தொடக்கத்தில் முடிவடையும். 2026–27–ம் ஆண்டுக்கான நிதிப்பற்றாக்குறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2027–28–ம் ஆண்டுக்கான நிதிப்பற்றாக்குறை இலக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## போதை ஒழிப்புக்கு ஒன்றிணைவோம்!

# போதை இல்லா இந்தியா! இளைஞர்களே நாட்டின் எதிர்காலம்!

## 'மன் கி பாத்'தில் பிரதமர் மோடி!!



புதுடில்லி,. ஆக. 30–

இந்தியாவை போதைப்பொருள் இல்லாத நாடாக மாற்றுவதும், இளைஞர்கள் போதைப்பொருட்களில் இருந்து விலகி இருப்பதை உறுதி செய்வதுமே அரசின் தெளிவான இலக்கு என மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார்.

மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: போதைப்பொருள் இல்லாத இந்தியாவையும், நம் இளைஞர்களுக்கு வலுவான எதிர்காலத்தையும் உருவாக்க நாம் ஒன்றிணைவோம். நாடு வளர்ச்சி அடைய வேண்டுமானால் போதைப்பொருள் இல்லாத நாடாக இந்தியா இருக்க வேண்டும். நாட்டை போதைப்பொருள் இல்லாத நாடாக மாற்றுவதும், இளைஞர்கள் போதைப்பொருட்களில் இருந்து விலகி இருப்பதை உறுதி செய்வதுமே அரசின் தெளிவான இலக்கு.

**விழிப்புணர்வு**

போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தி, போதைப்பழக்கத்தால் அவதிப்படும் தனிநபர்களுக்கு உதவ முன்வருபவர்களை நான் பாராட்ட விரும்புகிறேன்.

போதைப்பொ ருளின் ஆபத்துகளை எடுத்துரைப்ப தோடு, அதிலிருந்து மீள்வதற்கான வழிகள் குறித்து பாடல்கள் மற்றும் சிறு நாடகங்களை உங்களால் உருவாக்க முடியுமா?

**முக்கியத்துவம்**

பிஎம் ஸ்வநிதி திட்டம், லட்சக்கணக்கான பெண் தெருவோர வியாபாரிகள் தங்கள் தொழிலை விரிவுபடுத்தவும், வருமானத்தை அதிகரிக்கவும், தங்கள் குடும்பங்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவும் உதவு கிறது. தூய்மை என்பது மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

**இரவும், பகலும்!**

புதிய முயற்சிகளை மக்களின் பார்வைக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு மேடை தான் மன் கி பாத் ரேடியோ நிகழ்ச்சி.

இந்த ஆண்டு நடந்த அமர்நாத் யாத்திரையின் போது, ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்கள் யாத்ரீகர்களுக்கு சேவை செய்வதற்காக இரவும் பகலும் அயராது உழைத்தனர்.

உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்க வேண்டும். நாட்டை தன்னிறைவு அடைந்ததாக மாற்றுவதற்கு உறுதியோடு இருக்க வேண்டும்.

நமது பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் நமது மரபுகளைப் பேணிப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருப்பதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## கோவை, மதுரை, திருச்சி, திருப்பூர், சேலம், ஓசூர்; நகரங்களுக்கு புதிய வளர்ச்சி ஆணையங்கள்!




சென்னை, ஆக. 30–

தமிழகத்தின் முக்கிய தொழில் மற்றும் வர்த்தக நகரங்களான கோவை, மதுரை, திருச்சி, திருப்பூர், சேலம், ஓசூர்ஆகிய 6 நகரங்களுக்கு புதிய நகர்ப்புற வளர்ச்சி ஆணையங்கள் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சென்னையின் CMDA போன்று, நகரங்களின் எதிர்கால வளர்ச்சி, உள்கட்டமைப்பு, போக்குவரத்து, தொழில் வளர்ச்சி மற்றும் திட்டமிடலை ஒருங்கிணைக்கும் வகையில் இந்த ஆணையங்கள் செயல்படும். கடந்த 2021–ம் ஆண்டிலேயே இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்த நிலையில், தற்போது செயல்படுத்தும் பணிகள் தொடங்கியுள்ளன. மேலும், மதுரை, நீலகிரி, கோவை, வேலூர், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளுக்கான பிராந்திய வளர்ச்சித் திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. GIS அடிப்படையிலான மாஸ்டர் பிளான்கள் தயாரிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு வெளியிடப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 'நெட்' தேர்வு முடிவு வெளியீடு: உதவி பேராசிரியர் பணிக்கு 50,145 பேர் தகுதி!



சென்னை, ஆக. 30–

பல்கலைக்கழக மானியக் குழு வான யு.ஜி.சி. சார்பில் நடத்தப்பட்ட 'நெட்' (NET) தகுதித் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு ள்ளன. இதில், உதவி பேராசிரியராக பணி யாற்றுவதற்கு 50,145 பேர் தகுதி பெற்றுள்ளனர். நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் உதவி பேராசிரியராக பணியாற்ற வும், இளநிலை ஆராய்ச்சி உதவி த்தொகை பெறவும் யு.ஜி.சி. நெட் தேர்வில் தகுதி பெறுவது முக்கியமானதாகும். அதேபோல், பல்கலைக்கழகங்களில் பி.எச்.டி. மாணவர் சேர்க்கைக்கும் யு.ஜி.சி. நெட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன.

நடப்பாண்டுக்கான யு.ஜி.சி. நெட் தேர்வு ஜூன் 22 முதல் ஜூலை 5–ம் தேதி வரை நடைபெற்றது. நாடு முழுவதும் 6 லட்சத்து 7,151 மாணவ, மாணவிகள் தேர்வை எழுதினர்.

இந்தத் தேர்வுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டன. இதில், இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகை மற்றும் உதவி பேராசிரியர் பணிக்கு 4,241 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், உதவி பேராசிரியர் பணிக்கும், பி.எச்.டி. சேர்க்கை க்கும் 45,904 பேர் தகுதி பெற்றுள்ளனர். பி.எச்.டி. மாணவர் சேர்க்கைக்கு மட்டும் 97,434 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதற்கி டையே, வினாத்தாளில் ஏற்பட்ட பிழை காரணமாக ரத்து செய்யப்பட்ட ஆங்கிலம், வணிக வியல் மற்றும் சமூகவியல் பாடப்பிரிவுக ளுக்கான தேர்வு, வரும் செப்டம்பர் 9 மற்றும் 10–ம் தேதிகளில் நடைபெறும் என யு.ஜி.சி. தெரிவித்துள்ளது.

## நேபாள வெள்ளம்: 626 பேர் பலி; 3,000 பேர் மாயம்!




நேபாளம், ஆக. 30–

நேபாளம் மற்றும் திபெத் பகுதிகளில் ஏற்பட்ட கடும் வெள்ளம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பேரிடரில் இதுவரை 626 பேர் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 3,000 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நேபாளத்தின் ராசுவா, நுவாகோட், தடிங் உள்ளிட்ட 8 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ராசுவா பகுதியில் உள்ள மின்சார உற்பத்தி நிலையத்தின் சுரங்கப்பாதையில் சேறு நிரம்பியுள்ளதால், நேபாள ராணுவத்தின் உதவியுடன் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இமயமலையில் பனிப்பாறை உடைந்ததைத் தொடர்ந்து இந்த பேரழிவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் மின்சார உற்பத்தி மற்றும் நீர்மின் திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் சுமார் 12 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. வெள்ளப் பாதிப்பில் இருந்து முழுமையாக மீண்டு, மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள 4 முதல் 5 பில்லியன் அமெரிக்க டாலர் வரை தேவைப்படும் என நேபாள நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாடுகளின் உதவியையும் நேபாள அரசு கோரியுள்ளது.

## டிரம்ப்பின் வரிவிதிப்பு எதிரொலி... அமெரிக்க பொருட்களை புறக்கணித்து எதிர்ப்பை காட்டும் கனடா இளைஞர்கள்!

டொரண்டோ, ஆக. 30–

கனடாவுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடுமையான வரிவிதிப்பை அறிவித்துள்ளார். இதன்படி, கனடாவின் 2 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான சரக்குகளுக்கு கடந்த 22–ந்தேதி, 50 சதவீத வரி விதிக்கப்பட்டது.

இந்த இறக்குமதி வரி விதிப்புக்கு கனடா பிரதமர் மார்க் கர்னியின் அரசு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. பதிலுக்கு கனடாவும், 15 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை அமெரிக்க பொருட்களுக்கு வரி விதித்து அதிரடி காட்டியது.

இந்த இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக மோதல் அதிகரித்து காணப்படும் சூழலில், கனடா இளைஞர்கள் தங்களுடைய தேசப்பற்றை வெளிப்படுத்தும் வகையில், நடந்து கொள்கின்றனர்.

அவர்கள் அமெரிக்க தயாரிப்பு பொருட்களை நிராகரித்து வருகின்றனர். இதன்படி, அமெரிக்காவின் ஒயின் உள்ளிட்ட மதுபானங்கள் பல்வேறு மாகாணங்களில் உள்ள குடோன்களில் இருந்து நீக்கப்படுகின்றன.

கனடாவில் வாடிக்கையாளர்களின் போக்கிலும் பெரும் மாற்றம் காணப்படுகிறது. இதுபற்றி மான்ட்ரியல் சூப்பர்மார்க்கெட் மேலாளரான பீட்டர் கியானோபோலிஸ் கூறும்போது, பொருட்கள் எங்கிருந்து வருகின்றன என வாடிக்கையாளர்கள் கேட்கின்றனர். இந்த மனப்போக்கு அவர்களிடம் அதிகரித்து உள்ளது.

அவர்கள் கனடா தயாரிப்புகளை விரும்பி வாங்கி செல்கின்றனர் என்றார்.

எலெக்ட்ரானிக் பொருட்கள், மளிகை பொருட்கள், உணவு பொருட்கள் என பல்வேறு தயாரிப்புகளையும், அவை கனடாவில் உற்பத்தியான பொருட்களா? என பார்த்து, பார்த்து வாங்குகின்றனர். இதுபோக அமெரிக்காவுக்கான சுற்றுலாவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 25 சதவீதம் குறைந்துள்ளது.

இதனால், கனடாவை ஒட்டிய அமெரிக்க எல்லை பகுதிகளில் உள்ள சுற்றுலா மையங்கள் அவர்களை பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்றனர். எனினும், அமெரிக்காவை புறக்கணிக்கும் வகையில், அந்நாட்டுக்கு சுற்றுலா செல்லாமல் கனடாவாசிகள் தவிர்த்து வருகின்றனர். இதனால், அமெரிக்காவில் சுற்றுலா பாதிக்கப்பட்டு உள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 30.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 13-ம் தேதி

# அமெரிக்க கிரீன் கார்டுக்கு 179 ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா?



அமெரிக்காவில் வேலைவாய்ப்பு அடிப்படையில் கிரீன் கார்டு பெற காத்திருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் 10 லட்சத்தை நெருங்கியுள்ளது. மொத்த நிலுவை விண்ணப்பங்களில் இந்தியர்களின் பங்கு அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

EB–2 பிரிவில் விண்ணப்பித்த இந்தியர்கள் கிரீன் கார்டுக்காக 179 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், EB–3 பிரிவில் காத்திருப்பு காலம் சுமார் 38 ஆண்டுகள் என்றும் கூறப்படுகிறது. மொத்தமாக 12.64 லட்சம் விண்ணப்பங்கள் செயலாக்கத்துக்காக நிலுவையில் உள்ளன.

1990–ம் ஆண்டு அமெரிக்கா வேலைவாய்ப்பு அடிப்படையிலான குடியேற்ற விசாக்களுக்கு ஆண்டுக்கு 1.40 லட்சம்என்ற வரம்பை நிர்ணயித்தது. இதனால் இந்தியா, சீனா உள்ளிட்ட அதிக விண்ணப்பங்கள் வரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் நீண்டகால காத்திருப்பை எதிர்கொள்கின்றனர்.

குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கும் பலர், குழந்தைகளின் எதிர்காலம் உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுக்க முடியாமல் குழப்பத்தில் உள்ளனர். இந்த நீண்டகால கிரீன் கார்டு காத்திருப்பு பிரச்சினைக்கு டிரம்ப் நிர்வாகம் தீர்வு காண வேண்டும் என இந்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மு.க.அழகிரியின் மகனுக்கு மருத்துவ பரிசோதனை: சி.பி.ஐ. கோர்ட் உத்தரவு!




சென்னை, ஆக. 30–

முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரியின் மகன் துரை தயாநிதிக்கு மீண்டும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்ய மதுரை சி.பி.ஐ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ரூ.256.44 கோடி பணமோசடி வழக்கில் 3–வது குற்றவாளியாக சேர்க்க ப்பட்டுள்ள துரை தயாநிதி பக்கவாதம், ஞாபக மறதியால் விசாரணையை எதிர்கொள்ளும் நிலையில் இல்லை என ஏற்கெனவே அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சேப்பாக்கத்தில் துரை தயாநிதி, கிரிக்கெட் போட்டியை பார்த்ததாகவும், தேர்தலில் வாக்களித்ததாகவும் வெளியான காணொளியை சுட்டிக்காட்டி துரை தயாநிதியை மருத்துவப் பரிசோதனை செய்ய சி.பி.ஐ மனு தாக்கல் செய்திருந்தது. துரை தயாநிதியின் உடல் மற்றும் மனநிலையை

மீண்டும் பரிசோதிக்க உத்தரவிட்ட நீதிமன்றம், மருத்துவர் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து கிரிக்கெட் போட்டியை நேரில் பார்க்க செல்லும் தயாநிதியால் விசாரணையை எதிர்கொள்வதில் என்ன தடை இருக்க முடியும்? என்றும் கேள்வி எழுப்பி உள்ளது.

# பிரசாந்த் ‘போதைப்பொருள் தடுப்பு’ நல்லெண்ணத் தூதர்!





கேரள அரசின் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் நல்லெண்ணத் தூதராக தமிழ்த் திரைப்பட நடிகர் பிரசாந்த் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான பேட்ஜை அம்மாநில உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னிதாலா அவருக்கு அணிவித்தார்.

இந்தத் தகவலை அமைச்சர் சென்னிதாலா தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் அமைச்சர், ‘வரலாற்று சிறப்புமிக்க ‘பைபாட் படகு’ போட்டி பாரம்பரிய முறைப்படி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பிரபல தென்னிந்திய நடிகர் பிரசாந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அவர், மாநிலத்தின் பெருமைமிகு முன்னெடுப்பான ‘ஆபரேஷன் டூஃபான்’–ன் (Operation Toofan) (போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை) முன்னணி களப்பணியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அதற்கான பேட்ஜ் அணிவிக்கப்பட்டு, அவர் கவுரவிக்கப்பட்டார்.

# ஸ்டாலினின் ‘Z’ பாதுகாப்பு வாபஸ்! திமுகவில் அதிர்ச்சி!



சென்னை, ஆக. 30–

முன்னாள் முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டு வந்த இசட்(Z) பிரிவு பாதுகாப்பு தற்போது வாபஸ் பெற்றுள்ளது திமுகவினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மு.க.ஸ்டாலின் கடந்த ஆட்சியில் முதல்வராக இருந்த போது அவருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு பிரிவானது வழங்கப்பட்டிருந்தது. அந்த இசட் பிளஸ் பாதுகாப்பில் சிறப்பு பிரிவைச் சேர்ந்த வீரர்கள், ரயில்வே பாதுகாப்பு படை வீரர்கள், மத்திய பாதுகாப்பு படை என மொத்தம் 55க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் இடம்பெற்றிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் சில குண்டு தொலைக்காத காரும் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த சூழலில் சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் மு.க.ஸ்டாலின் ஆட்சியை இழந்தது மட்டுமல்லாமல் தனது சொந்த தொகுதியில் தோல்வியடைந்த எம்.எல்.ஏ பதவியையும் இழந்தார். அதனால், அவருக்கு வழங்கப்பட்டிருந்த இசட் பிரிவு பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டு முன்னாள் முதல்வர் என்ற அடிப்படையில் எஸ்காட் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த எஸ்காட் பாதுகாப்பு பிரிவில் ஒரு எஸ்.ஐ தலைமையிலான 4போலீசார் இடம்பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் முதல்வரான எடப்பாடி பழனிசாமிக்கும் எஸ்காட் பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது முன்னாள் முதல்வர் என்ற அடிப்படையில் மு.க.ஸ்டாலினுக்கு எஸ்காட் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# தேர்வு முறையில் மாற்றமா? பொதுமக்களிடம் கருத்து கேட்கும் மத்திய அரசு!




புதுடெல்லி, ஆக. 30–

நாட்டின் பொதுத் தேர்வு முறையை வலுப்படுத்த, தேர்வர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோரிடம் மத்திய அரசு கருத்துகளை கேட்டு வருகிறது. இதற்காக நீலகேணி தலைமையில் உயர்மட்ட பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் தயாரிப்பு, சரிபார்ப்பு, தேர்வு பாதுகாப்பு மற்றும் முறைகேடுகளைத் தடுப்பது குறித்து பொதுமக்கள் பரிந்துரைகளை வழங்கலாம். கருத்துகளை examreforms–taskforce.dopt.gov.in இணையதளம் அல்லது 1800–180–4747 என்ற கட்டணமில்லா எண்ணில் தெரிவிக்கலாம்.

நீட்–யுஜி வினாத்தாள் கசிவு, யுஜிசி–நெட் வினாத்தாள் பிழைகள் உள்ளிட்ட சர்ச்சைகளைத் தொடர்ந்து NTA–வில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 600 நிபுணர்கள் நீக்கப்பட்டு, புதிய நிபுணர்கள் சேர்க்கப்படுகின்றனர். வினாத்தாள்களில் தகவல், மொழி, மொழிபெயர்ப்பு மற்றும் வடிவமைப்பு பிழைகளைத் தடுக்க 4 அடுக்கு சரிபார்ப்பு முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

மேலும், தொழில்நுட்பம், நிதி, இணையப் பாதுகாப்பு, தேர்வு பாதுகாப்பு உள்ளிட்ட பிரிவுகளில் புதிய தொழில்முறை தலைவர்கள் நியமிக்கப்பட உள்ளனர். NTA–வில் புதிய இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே 50–க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

ரகசியத் தேர்வுப் பணிகளுக்காக தனிமைப்படுத்தப்பட்ட அறைகள், இணையத்துடன் நேரடியாக இணைக்கப்படாத கணினிகள் உள்ளிட்ட புதிய பாதுகாப்பு நடைமுறைகளும் கொண்டுவரப்பட உள்ளன.

# ரயில் பயணிகளுக்கு குட் நியூஸ்: IRCTC-யில் அதிரடி!




சென்னை, ஆக. 30–

ஆன்லைன் ரயில் டிக்கெட் முன்பதிவை வேகமாகவும் தடையின்றியும் மாற்ற IRCTC நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உச்சகட்ட நேரங்களில் ஏற்படும் இணையதள வேகக்குறைவு, நெரிசல் மற்றும் சேவைத் தடங்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் NGET தளத்தின் சர்வர், சேமிப்பு, நெட்வொர்க் மற்றும் மென்பொருள் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட உள்ளன.

தற்போது நிமிடத்திற்கு சுமார் 37,000 டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யும் திறன் உள்ளது; மேம்பாட்டுக்குப் பிறகு இது 1 லட்சத்துக்கும் அதிகமாக உயரக்கூடும். இதற்காக சுமார் ரூ.150 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல்.

மேலும், சேவை தடையின்றி தொடர ‘Active Disaster Re–covery’ அமைப்பும் உருவாக்கப்படுகிறது. புதிய இணையதளத்தில் தேவையற்ற CAPTCHA, பாப்–அப்கள் மற்றும் கிராபிக்ஸ் குறைக்கப்பட்டு, எளிமையான முன்பதிவு அனுபவம் வழங்கப்படுகிறது.

# அரசு ஊழியர்களுக்கான மாதாந்திர இடைக்கால உதவித்தொகை விதிகளில் திருத்தம்!



சென்னை, ஆக., 30–

தமிழக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எம்.ஏ.சித்திக் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:– கடந்த 1.1.2026 அன்று அல்லது அதற்கு பிறகு பணிநிறைவு பெற்றவர்கள், பணியின்போது இறந்தவ ர்கள் மற்றும் பணிநி றைவுக்கு பின் இறந்த பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (சி.பி.எஸ்.) உள்ள தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர இடைக்கால உதவித்தொகை மற்றும் குடும்ப உதவித்தொகை வழங்கும் அரசாணை கடந்த 16.6.2026 அன்று நிதித் துறையால் வெளியிடப்பட்டது. அதன்படி, கடைசியாகப் பெற்ற அடிப்படை ஊதியத்தில் 30 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம் இதில் எது அதிகமோ, அத்தொகையுடன் 60 சதவீதம் அகவிலைப்படி நிவாரணமும் வழங்கப்பட்டது.

6–வது ஊதியக்குழுவின் கீழ் சம்பளம் பெற்று ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு 1.1.2026 முதல் அகவிலைப்படி விகிதம் 262 சதவீதம் என்பதால், இவ்விதிகளில் திருத்தம் செய்து தற்போது புதிய அரசாணை பிறப்பிக்கப்படுகிறது. அதன் அடிப்ப டையில், 6–வது ஊதியக்குழுவின் கீழ் கடைசியாகச் சம்பளம் பெற்று, 30 சதவீத அடிப்படை ஊதியம் ரூ.10 ஆயிரம் மற்றும் அதற்கு அதிகமாக இருந்து. 7–வது ஊதியக்குழுவிற்கு மாற்றப்படாத ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிவாரணம் 262 சதவீத விகிதத்தில் வழங்கப்படும்.

6–வது ஊதியக்குழுவின் கீழ் 30 சதவீத அடிப்படை ஊதியம் ரூ.10 ஆயிரத்திற்கும் குறைவாக இருந்தால், இடைக்காலத்தில் குறைந்தபட்சத்தொகை ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டு 60 சதவீதம் அகவிலைப்படி நிவாரணம் வழங்கப்படும். ஆனால், 7–வது ஊதியக்குழுவின் கீழ் சம்பளம் பெற்ற அரசு ஊழியர்களுக்கு 60 சதவீதம் மட்டுமே அகவிலைப்படி நிவாரணமாக கணக்கிடப்படும். இதனடிப்படையில் கருவூலக்கணக்கு ஆணையர் நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் வெங்காயம் விற்பனை!



சென்னை, ஆக. 30–

சமையலுக்கு பிரதானமாக பயன்படுத்தப்படும் வெங்காயத்தின் விலை சமீபகாலமாக விலை உயர்ந்து காணப்படுகிறது. கடந்த மாதம் இறுதியில் கிலோ ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் தற்போது கிலோவுக்கு ரூ.30 வரை அதிகரித்து ரூ.60 வரை விற்பனையாகிறது. சின்ன வெங்காயத்தின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையான சின்ன வெங்காயம் தற்போது கிலோவுக்கு ரூ.20 வரை உயர்ந்து ரூ.70 வரை விற்பனை ஆகிறது.

வெளிச்சந்தையில் முக்கிய காய்கறிகள் விலை உயரும்போது, அதை கட்டுப்படுத்த ரேஷன் கடைகளில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. அந்த வகையில், ரேஷன் கடைகளில் குறைந்த விலைக்கு வெங்காயம் விற்க, கூட்டுறவு துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, கூட்டுறவு மற்றும் உணவு துறை அதிகாரி கூறியதாவது:– பொதுமக்களுக்கு வெங்காயத்தை குறைந்த விலைக்கு விற்க, மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. இதையடுத்து, ‘நாபெட்’ எனப்படும் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பிடம், முதல் கட்டமாக, 70,000 கிலோ வெங்காயம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கிடைத்ததும், தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் இந்த வெங்காயம் விற்கப்பட உள்ளது. ஒரு கிலோ, ரூ.30 முதல் ரூ.40–க்குள் விற்பனை செய்யப்ப டும். என்று கூறினார்.



# உங்க ராசி சொல்லுங்க... செப்டம்பர் பலன் இதோ!




உங்களுக்கு 2026 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதம் எப்படி இருக்கப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளதா? கீழே 12 ராசிக்காரர்களும் செப்டம்பர் மாதத்தில் எந்த மாதிரியான பலன்களைப் பெறப் போகிறார்கள் என செப்டம்பர் மாத ராசிப்பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உங்கள் ராசிக்கு 2026 செப்டம்பர் மாதம் எப்படி இருக்கும் என்பதை தொடர்ந்து படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

**மேஷம்**

மேஷ ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதமானது சாதாரணமாக இருக்கும். சிலருக்கு இம்மாதத்தில் சில நல்ல செய்திகள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இருந்தாலும் எந்த ஒரு வேலையை செய்வதாக இருந்தாலும், அதில் வெற்றி பெற கூடுதல் முயற்சி தேவைப்படும். பொறுமையாக எதையும் செய்தால், நல்ல பலன்களைப் பெறலாம்.

**ரிஷபம்**

ரிஷப ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் நல்ல நிதி ஆதாயங்கள் கிடைக்கும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். நீண்ட கால கடின உழைப்புக்கான பலன்கள் இம்மாதத்தில் கிடைக்கும். முக்கியமாக இம்மாதத்தில் நிதி நிலைமை முன்பை விட சிறப்பாக இருக்கும்.

**மிதுனம்**

மிதுன ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதம் சற்று மோசமாக இருக்கும். சில சிரமங்களை சந்திக்க நேரிடும். எதிர்பார்த்த வேலைகள் வெற்றிகரமாக நடக்காமல் போகலாம். இம்மாதத்தில் எந்த ஒரு முடிவுகளையும் அவசரப்பட்டு எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் சிறு தவறு கூட உங்களின் பெயரை பாதிக்கலாம். மொத்தத்தில் இம்மாதம் சற்று கவனமாக இருக்க அறிவுறுத்தப்படுகிறது.

**கடகம்**

கடக ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் வாழ்வில் நேர்மறையான மாற்றங்கள் ஏற்படக்கூடும். கலைத்திறன் மேம்படும் வாய்ப்புள்ளது. நீண்ட கால கடின உழைப்புக்கான பலன் கிடைக்கும். வியாபாரிகள் இம்மாதத்தில் நல்ல நிதி ஆதாயங்களைப் பெறுவார்கள். தொழில் ரீதியாக நன்றாக இருக்கும். இருந்தாலும், முயற்சிக்கேற்ற பலன் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமானதாக இருக்கும். தொழில் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். அதிர்ஷ்டத்தின் ஆதரவு கிடைப்பதால், ஒவ்வொரு வேலையிலும் நல்ல வெற்றி கிடைக்கும். சமூகத்தில் உயர்நிலையில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். காதல் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

**கன்னி**

கன்னி ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். குடும்ப வாழ்க்கை இனிமையாக இருக்கும். நிதி நிலைமை வலுவடையும். அன்புக்குரியவர்களின் முழு ஆதரவு கிடைக்கும் வாய்ப்புள்ளது. தொழில் ரீதியாக நன்றாக இருக்கும். பல வழிகளில் இருந்து பணம் தேடி வரும்.

**துலாம்**

துலாம் ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் நிலுவையில் உள்ள வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். அரசு தொடர்பான வேலைகளை செய்பவர்களுக்கு சிறப்பாக இருக்கும். முதலீடுகளில் இருந்து நல்ல லாபம் கிடைக்கும். பணியிடத்தில் கடின உழைப்பு பாராட்டப்படும். சிலருக்கு அலுவலகத்தில் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புக்கள் வழங்கப்படலாம்.

**விருச்சிகம்**

விருச்சிக ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் ஆரோக்கிய பிரச்சனைகளை அதிகம் சந்திக்க நேரிடும். பழைய பிரச்சனைகள் மீண்டும் தலைத்தூக்கி மன அழுத்தத்தை உண்டாக்கும். பணியிடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்க, தினசரி வழக்கத்திலும், போதிய ஓய்வைப் பெறுவதிலும் கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.

**தனுசு**

தனுசு ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதமானது சாதாரணமாக இருக்கும். நிதி நிலைமை வலுவடையும். கடின உழைப்புக்கான பலன் கிடைக்கும். வேலையில் படிப்படியான முன்னேற்றத்தைக் காண்பீர்கள். இருப்பினும் நிதி விஷயங்களில் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.

**மகரம்**

மகர ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமானதாக இருக்கும். இம்மாதத்தில் புதிய நட்புகள் கிடைக்கும். இந்த நட்பால் எதிர்காலத்தில் சிறப்பான பலன்களைப் பெறுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். நீண்ட காலமாக குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் இம்மாதத்தில் முடிவுக்கு வரும்.

**கும்பம்**

கும்ப ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் உங்களின் பெரிய கனவு நிறைவேறும். பணியிடத்தில் இலக்குகளில் கவனம் செலுத்தி செயல்பட்டால் நல்ல வெற்றி கிடைக்கும். ஆனால் அவசரப்பட்டு எதையும் செய்வதைத் தவிர்க்க வேண்டும். தொழிலதிபர்களுக்கு தங்களின் தொழிலை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரத்திலும் நல்ல லாபம் கிடைக்கலாம்.

**மீனம்**

மீன ராசிக்காரர்களே! செப்டம்பர் மாதத்தில் அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவு கிடைக்கும். பல வழிகளில் இருந்து நல்ல செய்திகளைப் பெறக்கூடும். நீண்ட காலமாக முடிக்க முடியாமல் இருந்த வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். தொழில் ரீதியாக இம்மாதத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பீர்கள். நிதி நிலையிலும் நல்ல உயர்வு ஏற்படும் வாய்ப்புள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## உடம்பில் இந்த 6 அறிகுறிகளா? B12 குறைபாடாக இருக்கலாம்!




நமது உடலின் சீரான செயல்பாட்டிற்கு வைட்டமின் B12 மிகவும் அவசியமான சத்தாகும். இது ரத்த சிவப்பணுக்கள் உருவாக்கம், நரம்புகளின் செயல்பாடு மற்றும் DNA உருவாக்கம் உள்ளிட்ட முக்கிய பணிகளில் பங்கு வகிக்கிறது. B12 குறைபாடு ஏற்பட்டால், சில உடல் மற்றும் மனநல மாற்றங்கள் ஏற்படலாம்.

1. உடல் சோர்வு: எப்போதும் சோர்வாகவும், மந்தமாகவும் உணர்வது B12 குறைபாட்டின் அறிகுறியாக இருக்கலாம்.

2. வெளிறிய சருமம்: சருமம் வழக்கத்தைவிட வெளிறி காணப்படுவது ரத்தசோகையுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

3. மூச்சுத்திணறல்: குறிப்பாக உடற்பயிற்சியின் போது மூச்சு வாங்குவது அல்லது சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

4. கை, கால்களில் கூச்சம்: ஊசி குத்துவது போன்ற உணர்வு, மரத்துப்போதல் அல்லது கூச்சம் அடிக்கடி ஏற்படலாம். இது நரம்புகள் பாதிப்புடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

5. நடப்பதில் சிரமம்: தள்ளாடி நடப்பது அல்லது சமநிலையை இழப்பது போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

6. மனநிலை மாற்றம்: எரிச்சல், பதட்டம், மனச்சோர்வு போன்ற மாற்றங்களும் சிலருக்கு ஏற்படலாம்.

B12 குறைபாட்டை உறுதி செய்ய மருத்துவரின் ஆலோசனையுடன் பரிசோதனை மேற்கொள்வது அவசியம். முட்டை, மீன், இறைச்சி மற்றும் B12 செறிவூட்டப்பட்ட உணவுகள் மூலம் B12 கிடைக்கிறது. தேவையானால் மருத்துவர் பரிந்துரைக்கும் சத்து மாத்திரைகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

## நேபாள வெள்ளத்தில் மீட்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலங்களை புதைக்க முடிவு!



நேபாளம், ஆக. 30–

நேபாள வெள்ளத்தில் மீட்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலங்களை புதைக்க முடிவு செய்துள்ளது. சிட்வான் பகுதியில் சடலங்களை பாதுகாக்க வசதி இல்லாததால் 223 சடலங்கள் புதைக்கப்படுகின்றன. சடலங்கள் அழுகும் நிலையில் உள்ளதால் டிஎன்ஏ மாதிரியை எடுத்துவிட்டு புதைக்கத் திட்டம். டிஎன்ஏ மாதிரி மூலம் யார் என்பது கண்டறியப்பட்டால் புதைத்த இடத்தை தோண்டி எடுத்து உடல் ஒப்படைக்கப்படும்.



## சினிமா துளிகள்..!

## கர்ப்பமாக இருந்தபோதே ‘ஜெயிலர் 2’ பாடலுக்கு ஆடிய பூர்ணா!



ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் ‘ஜெயிலர் 2’ படத்தின் முதல் பாடலான ‘அலா போலேலோ’ சமீபத்தில் வெளியானது. இதில் நடிகையும் நடனக் கலைஞருமான பூர்ணாவின் நடனம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நடித்துள்ள பூர்ணா, சுமார் ஒரு வருடத்திற்குப் பிறகு இந்தப் பாடல் மூலம் மீண்டும் பெரிய திரையில் தோன்றுகிறார்.

சமீபத்திய பேட்டியில், ‘அலா போலேலோ’ பாடலை படமாக்கியபோது தான் கர்ப்பமாக இருந்ததாக பூர்ணா தெரிவித்துள்ளார். பாடல் படப்பிடிப்பு 6 நாட்கள் நடைபெற்றதாகவும், ஒரு நாள் படப்பிடிப்பு முடிந்ததும் ‘அகண்டா 2’ படப்பிடிப்புக்குச் சென்றதாகவும் கூறினார்.

அடுத்த நாள் தான் கர்ப்பமாக இருப்பது தெரியவந்ததாகவும், அதன்பிறகும் ‘ஜெயிலர் 2’ பாடலுக்காக நடனமாடியதாகவும் தெரிவித்தார். இதைக் கேட்ட அவரது தாயார், “இப்படி ஆடியிருக்கிறாய்; கர்ப்பமாக இருப்பது எப்படி சாத்தியம்?” எனக் கூறி மீண்டும் பரிசோதனை செய்யச் சொன்னதாகவும், மீண்டும் பரிசோதித்தபோதும் கர்ப்பம் உறுதியானதாகவும் பூர்ணா தெரிவித்துள்ளார்.

# பொதுத்தேர்வுகள் முறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவர மத்திய அரசு திட்டம்!



சென்னை, ஆக. 30–

பொதுத்தேர்வுகள் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டு இருக்கிறது. இதற்காக உயர்மட்ட தேர்வுகள் சீர்திருத்தக் குழுவையும் அமைத்து உள்ளது. இந்த நிலையில் தேர்வுகளில் என்னென்ன மாதிரியான சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்பது குறித்து கருத்துகளையும், யோசனைகளையும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் தெரிவிக்கவும் மத்திய அரசு வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

அதன்படி, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பாட நிபுணர்கள், தொழில் நிறுவனங்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், பொதுமக்கள் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொள்வதினால் தேர்வு முறைகள் மிகவும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும், திறமையானதாகவும் மாற்ற உதவும் என மத்திய அரசு நம்புகிறது.

அவ்வாறு கருத்துகள், யோசனைகளை “hptf” என டைப் செய்து 7827042830 என்ற எண்ணுக்கு வாட்ஸ்–அப் வாயிலாக , https://examreforms–taskforce.dopt.gov.in இணையதளம் வாயிலாகவும், 1800–180–4747 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும், ExamReformsTaskforce@dopt.gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாகவும் தெரிவிக்கலாம். கருத்துகளை ஆங்கிலம், இந்தி அல்லது தமிழ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் வருகிற 13–ந்தேதி வரை சொல்லலாம் என மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

# ஆன்லைனில் மின் கட்டணம்: 10 கோடியை தாண்டிய நுகர்வோர் எண்ணிக்கை!



சென்னை, ஆக. 30–

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், மின்சார நுகர்வோர்களுக்கு விரைவான சேவைகளை வழங்குவதற்காக பல்வேறு மேம்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக டிஜிட்டல் முறையில் மின் கட்டணம் செலுத்தும் வசதியும் அடங்கும். தமிழ்நாடு முழுவதும் 2.54 கோடி வீடுகள் உட்பட அனைத்து பிரிவுகளிலும் 3.51 கோடி மின் நுகர்வோர்கள் உள்ளனர். இலவச மின்சார பயனாளிகள் போக மாதம் சராசரியாக 1 கோடி முதல் 1.15 கோடி வரை நுகர்வோர்கள் மின் கட்டணம் செலுத்துகின்றனர். செல்போன் பயன்பாடு அதிகரிப்பால் பலரும் அரசு மற்றும் தனியார் துறை சேவைகளுக்கான கட்டணங்களை டிஜிட்டல் முறையில் செலுத்தவே ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால் 2025 – 26ல், மின் வாரியத்திற்கு டிஜிட்டல் முறையில் கட்டணம் செலுத்தியவர்கள் எண்ணிக்கை, 10.63 கோடியாக அதிகரித்துள்ளது. இதன்படி அவர்கள் 62,537 கோடி ரூபாய் டிஜிட்டல் முறையில் செலுத்தியுள்ளனர். இது 2024 – 25ல் 9.56 கோடி நுகர்வோர்களாகவும், செலுத்திய கட்டணம் 58,285 கோடி ரூபாயாகவும் இருந்தது.

இதுதொடர்பாக மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், “ஆன்லைனில் மின் கட்டணம் செலுத்துவோர் எண்ணிக்கை ஆண்டுக்கு, 10 முதல் 15 சதவீதம் வரை வளர்ச்சி அடைந்து வருகிறது. கடந்த ஆண்டில் மின் கட்டணம் செலுத்தியதில் டிஜிட்டலின் பங்கு 87 சதவீதம் ஆகும். ஆன்லைனில் இன்னும் புதிய சேவைகள் தொடங்கப்பட உள்ளன. அதன் வாயிலாக எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்” என்று அவர் கூறினார்.

# நேபாளத்திலிருந்து திரும்பியவர்களுக்கு அமைச்சர் ராஜ்குமார் ஆறுதல்!



நேபாளம், ஆக. 30–

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில், சிதம்பரத்தில் இருந்து சென்ற ஆன்மிக பயணிகள் 11 பேர் சிக்கினர். அவர்களை ராணுவத்தினர் பத்திரமாக மீட்டனர். டில்லி வழியாக நேற்று முன்தினம் இரவு விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர். அவர்களில் 5 பேர், சிதம்பரத்தைச் சேர்வர்களாக இருந்தும், தற்போது அவர்கள் வசித்து வரும் பெங்களூரு, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்குச் சென்றனர். மீதமுள்ள 6 பேர் சிதம்பரம் வந்து சேர்ந்தனர்.

ஊர் திரும்பிய, சிதம்பரத்தை சேர்ந்த முத்துகுமரேசன், 56; அவரது மனைவி மைதிலி, 49; தியாகராஜன்,55; அவரது மனைவி கிருபாகிரி, 48; பழனியப்பன், 69; அவரது மனைவி, 62; கலைமதி ஆகிய 6 பேரையும், நேற்று சிதம்பரம் சப் கலெக்டர் அலுவலகத்தில், தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் ராஜ்குமார், கலெக்டர் சிபிஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் நேரில் சந்தித்து சம்பவம் பற்றி கேட்டறிந்து ஆறுதல் கூறினர்.

அப்போது, அமைச்சர் ராஜ்குமார் கூறுகையில், நேபாள வெள்ள பாதிப்பில் இருந்து சிதம்பரத்தை சேர்ந்த 11 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இதில், சிதம்பரம் முருகானந்தம், புவனகிரி திரிபுரசுந்தரி இருவர் மட்டும், எங்கு உள்ளனர் என்ற தகவல் இல்லை.

அவர்களையும் மீட்பு குழுவினர் தேடி வருகின்றனர் என்றார்.

சிதம்பரம் சப் கலெக்டர் (பொ) தனலட்சுமி, டி.எஸ்.பி., பிரதீப், இன்ஸ்பெக்டர் தேவேந்திரன், நகராட்சி ஆணையர் மல்லிகா, பொறியாளர் சுரேஷ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# தூத்துக்குடி துறைமுகத்தில் முதல்முறையாக கச்சா பாமாயில் இறக்குமதி..!



தூத்துக்குடி, ஆக. 30–

மலேசியாவின் குனாக் துறைமுகத்தில் இருந்து 15 ஆயிரம் டன் கச்சா பாமாயிலை ஏற்றிக்கொண்டு வந்த சரக்கு கப்பல் நேற்று முன்தினம் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தை வந்தடைந்தது. 143 மீட்டர் நீளமுள்ள இந்த கப்பல் 9.70 மீட்டர் மிதவை ஆழம் கொண்டது. துறைமுக ஆணைய தலைவர் சுஷாந்தகுமார் புரோஹித் முன்னிலையில் கச்சா பாமாயிலை இறக்கும் பணி தொடங்கியது. நிகழ்ச்சியில் துணைத் தலைவர் ராஜேஷ் சவுந்தரராஜன், கே.டி.வி. ஹெல்த் புட் நிறுவன நிர்வாக இயக்குனர் கே.டி.வி. நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாற்றியமைக்கப்பட்ட முனையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள சேமிப்பு தொட்டிகளுக்கு குழாய்கள் மூலம் பாமாயில் கொண்டு செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. கப்பலில் உள்ள 15 ஆயிரம் டன் பாமாயிலும் நாளைக்குள் (திங்கட்கிழமை) இறக்கப்பட்டு விடும்.

கே.டி.வி. ஹெல்த் புட் நிறுவனம் துறைமுகத்தின் தொழில் மண்டலத்தில் 4 சேமிப்பு தொட்டிகளை அமைத்துள்ளது. இந்த நிறுவனம் நாளொன்றுக்கு 1,000 டன் சுத்திகரிக்கப்பட்ட பாமோலின் தயாரிக்கும் திறன் கொண்டது.

இங்கு தயாரிக்கப்படும் பாமோலின், தென் மாவட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளில் உள்ளூர் நுகர்வுக்காக வினியோகிக்கப்படுகிறது. துறைமுகம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் வ.உ.சி. துறைமுக நிர்வாகம் சுமார் 1,633 ஏக்கர் நிலத்தை மின் உற்பத்தி நிலையங்கள், ரசாயன தொழில்கள், கிடங்குகள், உணவு பதப்படுத்துதல், சமையல் எண்ணெய் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட தொழில்களுக்கு ஒதுக்கி உள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட நிலக்கரி முனையத்தில் முதல் முறையாக கச்சா பாமாயில் கப்பல் கையாளப்பட்டிருப்பது, துறைமுகத்தில் சரக்கு வகைகளைப் பல் வகைப்படுத்தவும், துறைமுகம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கும், பிராந்திய உணவு பதப்படுத்துதல் மற்றும் சமையல் எண்ணெய் துறையின் விரிவாக்கத்துக்கும் உதவும் என்று துறைமுக ஆணைய தலைவர் சுஷாந்த குமார் புரோஹித் தெரிவித்தார்.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் நினைவு தினம் நடைபெறுவதையொட்டி, மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிவகுரு பிரபாகரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் உடன் இருந்தார்.

# வேலை வாய்ப்பு

## பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தில் வேலை!




**பணியிடங்கள் விவரம்:**

1. ஜூனியர் ரிசர்ச் பெல்லோ: 16 இடங்கள். சம்பளம்: ரூ.37,000. வயது: 28க்குள். தகுதி: இயற்பியல்/எலக்ட்ரானிக்ஸ் பாடப்பிரிவில் 60% மதிப்பெண்களுடன் எம்எஸ்சி பட்டம் பெற்று ‘நெட்’ தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் பாடத்தில் பி.இ., பட்டம் பெற்று ‘கேட்’ தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. ரிசர்ச் அசோசியேட்: 7 இடங்கள். சம்பளம்: ரூ.67,000. வயது: 35க்குள்.

தகுதி: இயற்பியல்/எலக்ட்ரானிக்ஸ் பாடத்தில் பி.ஹெச்டி பட்டம் அல்லது எம்.இ.,/எம்.டெக்., படிப்புடன் 3 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முகத் தேர்வு 1.9.2026 முதல் 9.9.2026 வரை நடைபெறும்.

www.drdo.gov.in என்ற இணையதளத்தின் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதை பூர்த்தி செய்து தேவையான அனைத்து சான்றிதழ்களின் நகல்களுடன் பயோடேட்டாவை இணைத்து நேர்முகத் தேர்வுக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் நாட்கள்: 1.9.2026 முதல் 9.9.2026 வரை.

### காங்கிரஸ் கட்சியின் அடிப்படையில் இருப்பவர்களுக்கும்

# பாரபச்சம் இல்லாமல் பதவிகள் வழங்கப்படும்; திருப்பூரில் காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர் R.P.ரமேஷ் பேட்டி!



திருப்பூர், ஆக. 30–

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி இயக்க மறுசீரமைப்பு திட்டம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி ஒன்றிய , நகர, பேரூர் நிர்வாகிகள் புதிதாக தேர்ந்தெடுக்கும் பணிகளின் கீழ் ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் எஸ்.எஸ்.ஏ–2 மறுசீரமைப்பு இயக்க ஆலோசனை மற்றும் விண்ணப்பம் வழங்கும் கூட்டம் திருப்பூர் மாவட்டம் செங்கப்பள்ளி பகுதியில் உள்ள தனியார் அரங்கத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர். K.P.முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் மேலிட பொறுப்பாளர்.R.P. ரமேஷ், மாநில சொத்து மீட்பு குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான R.M. பழனிசாமி ஆகியோர் கலந்து கொண்டு மறு சீரமைப்பு குறித்து ஆலோசனைகளை வழங்கினர். தொடர்ந்து புதிதாக பொறுப்புகளுக்கு.விண்ணர்பித்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மேலிட பார்வையாளர் ரமேஷ் கூறுகையில் மூத்த முன்னோடிகளுக்கும் அடிம ட்டத்தில் இருப்பவர்களுக்கும் ஒன்றிய பொறுப்பில் இருப்பவர்களுக்கும் வயதின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் பதவிகள் வழங்கப்படும் என்றும் இதில் யாருக்கும் பாரபட்சம் இருக்காது என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்.L.P. பாலசுப்பிரமணியம், ஊத்துக்குளி தெற்கு வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர். மனோஜ் குமார், ஊத்துக்குளி வடக்கு வட்டார தலைவர். சர்வேஸ்வரன், கிழக்கு வட்டாரத் தலைவர். பழனிசாமி, செங்கப்பள்ளி, குன்னத்தூர், உள்ளிட்ட ஒன்றியங்களில் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## "பேச்சு போதும்... பதில் எங்கே?"




## நேபாள பெருவெள்ளம்: ரூ.34 கோடி நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்! - அமெரிக்கா!

அமெரிக்கா, ஆக. 30–

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்துக்கு ரூ. 34 கோடி நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.



நேபாளத்தின் ரசுவா மாவட்டத்தில், பனிப்பாறைகள் உடைந்து போடே கோஷி ஆற்றில் கடந்த ஆக. 26 ஆம் தேதி திடீரென பெரு வெள்ளம் ஏற்பட்டு அங்குள்ள பாலங்கள், கட்டடங்கள் உள்ளிட்டவை அடித்துச் செல்லப்பட்டன. இந்தியர்கள் உள்பட உலகின் பல நாடுகளைச் சேர்ந்த 2500 க்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போன நிலையில், அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், பலி எண்ணிக்கை 700 ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பேரிடரால் பாதிக்கப்பட்ட நேபாளத்துக்கு உலகின் பல நாடுகள் மீட்புப் பணிகளுக்கு தங்களுடைய வீரர்களை அனுப்புதல், நிவாரணப் பொருள்கள் வழங்குதல் உள்ளிட்ட உதவிகளை செய்து வருகிறது.

இந்த நிலையில், ரூ. 34 கோடிக்கும் மேற்பட்ட நிவாரணப் பொருள்களை அமெரிக்கா வழங்க உள்ளதாக, அந்நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10,000 குடும்பங்களுக்கு அவசரகால உணவுப் பொருள் உள்ளிட்டவையும் அமெரிக்கா வழங்கவுள்ள நிவாரணப் பொருள்களில் அடங்கும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

## பஞ்சாப்: ஆம் ஆத்மி தலைவர் குர்பிரீத் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை!

பஞ்சாப், ஆக. 30–

பஞ்சாபின் ஃபெரோஸ்பூர் மாவட்டத்தில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் குர்பிரீத் சிங் (என்ற) கோபி, ஆயுதம் ஏந்திய 4 பேரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தேர்தல் தொடர்பாக ஏற்பட்ட தகராறே இந்த கொலைக்கு காரணம் என்று போலீஸார் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளனர்.




சனிக்கிழமை மாலை, மாம்டோட் பகுதியின் முக்கிய சந்தைப் பகுதியில், காரில் வந்த நான்கு பேர் தங்கள் வாகனத்தை விட்டு இறங்கி, இருசக்கர வாகத்தில் சென்றுகொ ண்டிருந்த 45 வயதான சிங் மற்றும் ஹர்பிரீத் (எ) ஹாப்பி (22) ஆகியோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். பாதிக்கப்பட்டவர்கள் காரில் இருந்ததாக ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவித்திருந்தன.

தகவல் அறிந்த வட்டாரங்களின்படி, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்தவரும் மாம்டோட் நகர் பஞ்சாயத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவருமான விக்கி மைனி, ஒரு தனி காரில் சிங்கைப் பின்தொடர்ந்து சென்றுள்ளார். ஆனால் அவரும் தாக்குதலுக்கு உள்ளானார். இருப்பினும் அவர் காயமின்றித் தப்பினார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் மருத்துவமனைக்குக் கொண்டு வரும்போதே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதேவேளையில், ஹர்பிரீத் மேல் சிகிச்சைக்காக லூதியானாவில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும், அவர்களைப் பிடிக்கக் போலீஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மூத்த காவல் கண்காணிப்பாளர் பூபிந்தர் சிங் தெரிவித்தார். சமீபத்திய நகராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான தனிப்பட்ட விரோதத்தின் காரணமாகவே இந்தக் கொலை நடந்துள்ளதாக அவர் கூறினார்.

## மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைப்பு ஏற்புடையதல்ல: திருமாவளவன்!

சென்னை, ஆக. 30–

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திருமாவளவன் பேசியதாவது: கொள்கை விளக்கக் குறிப்பேடுகளில் வழக்கமாக இடம்பெறும் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் மற்றும் பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற மாபெரும் தலைவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது இது உள்ளக்கத்தோடு நடந்துள்ளதா என கேள்வி எழுகிறது.



இதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகளும், அமைச்சர்களும் உரிய விளக்கத்தை அளிப்பார்கள் என்று நம்புகிறேன். இனி வரும் காலங்களில் அது போன்ற பிழைகள் நடைபெறாத வகையில் பார்த்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் என்று தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு, ''அது ஏற்புடையதல்ல இதுவரை வழங்கி வந்த பாதுகாப்பை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரையும், எஸ்எஃப்ஐ உள்ளிட்ட மாணவர் அமைப்பினரையும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட அதிகாரிகள் மீதான அரசின் நடவடிக்கை மென்மையாக இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு,

''இது குறித்து ஏற்கெனவே எனது கருத்தை கூறியுள்ளேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்துள்ள விமர்சனங்களையும், கோரிக்கைகளையும் விடுதலை சிறுத்தைகள் கட்சி அப்படியே வழிமொழிகிறது. இந்த அணுகுமுறையும் ஏற்புடையதல்ல. முதல்வர் இதில் நேரடியாகத் தலையிட வேண்டும். தோழமைக் கட்சிகளைப் புண்படுத்தாத வகையிலான அரசு செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்'' என்று பேசினார்.

திமுக ஆட்சிக் காலத்தில் தலித் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதாக, பாதிக்கப்பட்டுள்ளதாக சட்டப்பேரவையில் அமைச்சர் வன்னி அரசு பேசியதற்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறித்த கேள்விக்கு,

''எதுவும் செய்யவில்லை என்று சொல்லவில்லை. திரித்துப் பேசக்கூடாது. பொதுத் தொகுதிகளில் தலித்துகளை நிற்க வைத்து வெற்றி பெறச் செய்தோம் என கூறினார்கள் அது உண்மைதான். பொதுத்தொகுதிகளில் நிற்க வைப்பது இயல்பான ஒன்றுதான்.

தலித்துகள் 234 தொகுதிகளிலும் போட்டியிட முடியும். ஆனால், தலித் அல்லாதவர்கள் தனித் தொகுதிகளில் போட்டியிட முடியாது. அது சட்டப்படி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொதுத் தொகுதிகளில் தலித்துகளை நிறுத்துவதை ஏதோ அவர்களுக்கு பரிதாபப்பட்டு நிறுத்தினீர்களா அல்லது தகுதியானவர் அடிப்படையில் நிறுத்தினீர்களா என வன்னி அரசு கேள்வி எழுப்பி உள்ளார்.

வன்னி அரசு தவறாக பேசினார் என்று கேள்வி எழுப்பி உள்ளனர். தலித்துகளை பொது தொகுதிகளில் நிறுத்துவது இறக்கப்பட்டு செய்வது போல என்று சொல்லக்கூடாது'' என்று தெரிவித்தார். தவெக அரசு இந்த ஐந்து ஆண்டுகளில் தலித்துகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்ற கேள்விக்கு,

''தவெக தலைமையிலான இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தலித் மக்களுக்கு இன்னும் பல சட்டப்பூர்வ உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன. குறிப்பாக, வன்கொடுமை தடுப்புச் சட்டம் இந்தியா முழுவதும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் சட்டம் – ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என்ற அதிகாரிகளின் கருத்துக்களால் பல நல்ல திட்டங்கள் முடங்குகின்றன. ஆட்சியாளர்கள் விரும்பினாலும் அதிகாரிகள் சில இடங்களில் முட்டுக்கட்டை போடுகின்றனர்.

தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சியாக, தலித் மக்களின் மேம்பாட்டிற்காக அரசு செய்ய வேண்டிய அவசியமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை அவ்வப்போது சுட்டிக்காட்டியும், கோரிக்கைகளை வலியுறுத்தியும் உரிய தீர்வுகளைப் பெற விசிக தொடர்ந்து குரல் கொடுக்கும்'' என்று திருமாவளவன் குறிப்பிட்டார்.

## தி.மு.க.வில் புதிய பாய்ச்சல்! 77 --- >110 மாவட்டங்கள்! செப். 17- முப்பெரும் விழாவில் அறிமுகம்!

சென்னை, ஆக. 30–

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. சந்தித்த தோல்விக்கான காரணங்களை ஆராய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில், கட்சியை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இதன் ஒரு பகுதியாக, தற்போது 77 ஆக உள்ள தி.மு.க. மாவட்டங்களின் எண்ணிக்கையை 110 ஆக உயர்த்த கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளார். இதன்படி, புதிதாக பிரிக்கப்பட்ட 110 மாவட்டங்கள் மற்றும் அவற்றில் இடம்பெறும் சட்டமன்றத் தொகுதிகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**மாவட்ட செயற்குழு கூட்டம்**

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 110 மாவட்டங்களில் எந்தெந்த ஒன்றியங்கள், நகரங்கள் மற்றும் பேரூராட்சிகள் இடம்பெற வேண்டும் என்பது குறித்து தற்போதுள்ள 77 மாவட்ட செயலாளர்கள், மாவட்ட செயற்குழு கூட்டங்களை நடத்தி ஆலோசனை வழங்க வேண்டும். இந்த பரிந்துரைகளை 15 நாட்களுக்குள் கட்சித் தலைமைக்கு அளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தி.மு.க.வில் வழக்கமாக மாவட்ட செயலாளர்கள் கட்சித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதற்கு முன்பு, மாவட்டங்களை நிர்வகிக்க பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

அந்த வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 110 மாவட்டங்களுக்கும் பொறுப்பாளர்கள் விரைவில் தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த 110 பொறுப்பாளர்களையும் செப்டம்பர் 17–ஆம் தேதி நடைபெற உள்ள தி.மு.க. முப்பெரும் விழாவில் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வைக்க திட்டமிட்டுள்ளார். விழா நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக கவர்னராக கிரண் குமார் ரெட்டி நியமினம்?

சென்னை, ஆக. 30–

தமிழ்நாட்டின் கவர்னராக இருந்த ஆர்.என்.ரவி கடந்த மார்ச் மாதம் 5–ந் தேதி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அவருக்கு பதிலாக கேரள மாநிலத்தின் கவர்னர் ஆர். வி.அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு கவர்னராக நியமனம் செய்யப்பட்டார். ந்இவர்தான் முதல்–அமைச்சர் விஜய்க்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். கடந்த 6 மாத காலமாக தமிழகத்திற்கு புதிய கவர்னர் நியமிக்கப்படாமல் இருக்கும் நிலையில் தமிழகத்தின் புதிய கவர்னராக ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்–மந்திரியும், பா.ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவருமான கிரண் குமார் ரெட்டி நியமிக்கப்பட இருப்பதாக பேச்சுகள் எழுந்து உள்ளன.



கடந்த 2 நாட்களாக ஆந்திர மாநிலத்தில் இது பரபரப்பாக பேசப்படுகிறது. ஏற்கனவே மத்திய மந்திரி சபையில் மாற்றங்கள் செய்யப்பட இருப்பதாக வும், அப்போது தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் கவர்னர்கள் புதிதாக நியமிக்கப்பட இருப்பதாகவும் தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

இந்த நிலையில் கவர்னர் நியமனம் பற்றிய பேச்சு எழுந்துள்ளது. பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் நாடுகளின் பயணத்தை முடித்துக் கொண்டு, நாடு திரும்பிய பிறகு இந்த மாற்றங்கள் செய்யப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பணியின்போது அரசு ஊழியர்கள் எவ்வளவு பணம் வைத்திருக்கலாம்? வழிகாட்டுதல்களை உருவாக்க மதுரை ஐகோர்ட்டு உத்தரவு!

சென்னை, ஆக. 30–

அரசு ஊழியர்கள் பணியின்போது எவ்வளவு பணம் வைத்திருக்கலாம் என்பது பற்றிய வழிகாட்டுதல்களை நிர்ணயிக்க தமிழக அரசுக்கு மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.



நெல்லை மாவட்டத்தை சேர்ந்த கலா, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்தமனுவில் கூறியிருந்ததாவது:–

நெல்லை மாவட்டம் முக்கூடலில் சார்பதிவாளராக கடந்த 2021–ம் ஆண்டில் பணியாற்றினேன். அப்போது எனது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை நடத்தினர். இதில் ரூ.45 ஆயிரத்தை கைப்பற்றினர். இந்த நடவடிக்கை தொடர்பாக வழக்குப்பதிவு செய்தனர். அதன் அடிப்படையில் என் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதனை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி புகழேந்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான வக்கீல், அந்த தொகை திருமண செலவுக்காக மனுதாரர் வைத்திருந்த பணம்தான். எனவே அவர் மீதான நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும் என வாதாடினார்.

இந்த வழக்கை விசாரித்து நீதிபதி புகழேந்தி பிறப்பித்த உத்தரவு வருமாறு:–

லஞ்ச ஒழிப்பு துறையினரால் நடத்தப்பட்ட திடீர் ஆய்வின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசு ஊழியர் ஒருவர் பணியில் இருக்கும்போது வைத்திருக்கக்கூடிய அதிகபட்ச பண அளவு குறித்து எந்தவொரு வழிகாட்டுதலோ அல்லது நிபந்தனையோ இல்லை என்றே தெரிகிறது.

இதே கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட பிற வழக்குகளில், வெறும் 1,500 ரூபாயை வைத்து இருந்ததற்காகக்கூட லஞ்ச ஒழிப் புத்துறையால் வழக்குகள் தொடரப்பட்டு இருப்பது தெரியவருகிறது. இந்த விவகாரத்தில் கூடுதல் அட்வகேட் ஜெனரல் உதவுமாறு கோரப்பட்டது. இதையடுத்து பதிவுத்துறை சார்பில் 2009–ம் ஆண்டில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை விவரத்தை இந்த கோர்ட்டில் தாக்கல் செய்தனர்.

அதில், பதிவுத்துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது பணம் வைத்திருப்பது தொடர்பான சில வழிகாட்டுதல்களை இந்த சுற்றறிக்கை அறிவுறுத்துகிறது. இதுதொடர்பாக பதிவேடுகளை பராமரிக்க அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் கூடுதல் அட்வகேட் ஜெனரல் தெரிவித்தார்.

இது பதிவுத்துறைக்கு மட்டுமே அனுப்பப்பட்ட சுற்றறிக்கையாகும். தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான வழிகாட்டுதலோ அல்லது அரசாணையோ வெளியிடப்படவில்லை என்றே தெரிகிறது.

எனவே இந்த விவகாரம் குறித்து அரசு மட்டத்தில் பரிசீலிக்கப்பட வேண்டி உள்ளது. இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, அந்தந்தத் துறைகளில் ஏதேனும் வழிகாட்டுதல்கள் உள்ளதா என்பது குறித்தும், பணியில் இருக்கும்போது அரசு ஊழியர்கள் வைத்திருக்கக்கூடிய பணத்தின் அளவை நிர்ணயிக்கும் வகையில் சீரான வழிகாட்டுதல்கள் அல்லது அரசாணையை வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அரசின் கருத்துகளை இந்த கோர்ட்டு எதிர்பார்க்கிறது.

ஏறக்குறைய அனைத்து கட்டணங்களையும் டிஜிட்டல் மூலம் மக்கள் செலுத்தக்கூடிய இன்றைய காலகட்டத்தில், அலுவலகத்திற்கு செல்லும்போது கணிசமான அளவு ரொக்கப் பணத்தை எடுத்து செல்வது தொடர்பான நடைமுறை குறித்து, அரசு ஒரு பொருத்தமான வழிகாட்டுதலை நிர்ணயிப்பதன் மூலம் தீர்வு காணவேண்டும். இத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டால், அது அரசு அலுவலகங்களில் ஊழலை ஓரளவுக்கு கட்டுப்படுத்தக்கூடும். அதேநேரத்தில் அரசு ஊழியர்கள் தேவையற்ற வகையில் துன்புறுத்தப்படாமல் இருப்பதையும் உறுதி செய்யும்.

ஊழலை ஒழிப்பதை அரசு தனது நோக்கமாக கொண்டுள்ளது. இதுதொடர்பாக வகுக்கப்படும் வழிகாட்டுதல்களானது, ஊழலற்ற நிர்வாகத்தை அடைவதற்கான அரசின் நோக்கத்தை வலுப்படுத்தக்கூடும். அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்வதற்காக இந்த வழக்கு வருகிற வருகிற 3–ந்தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## 3 ஃபைல்களை நீ அவிழு, நானும் அவிழ்க்கிறேன்: நான் மோசமான ஆளு- ஆர்.எஸ். பாரதி!

வேலூர், ஆக. 30–

வேலுரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–



திமுக–வை பார்த்து சவால் விடுகிறார் விஜய். கோப்புகள் எல்லாம் ரெடியா இருக்கு, டேபிளில் இருக்கிறது. நான் அவிழ்த்தால் என்ன ஆகும் என்று சட்டசபையில் சொல்கிறார். அவிழ்ப்பதுதான் உன்னோட வேலை. இந்த பூச்சாண்டி காட்டுவதெல்லாம் வேண்டாம். தணிக்கை செய்யப்பட்டது என்கிறார். ஒன்றும் தெரியாதவர்கள்தான் அமைச்சராகவும், எம்.எல்.ஏ.–வாகவும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் சிஏஜி அறிக்கை வைக்கப்பட்டு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வார்கள். அதேபோல் சட்டசபையில் சிஏஜி ரிப்போர்ட்டை வைப்பார்கள். அந்த சிஏஜி ரிப்போர்ட்தான் இந்த மூன்றும்.

எந்தவொரு சிஏஜி ரிப்போர்ட்டும் அரசாங்கத்தை பாராட்டி இருக்காது. ஆடிட் என்பது மாநகராட்சி முதல் அரசாங்கம் வரை நடக்கக் கூடியது. உடனே ஊடகங்கள் எல்லாம், பத்திரிகை எல்லாம் மூன்று பைல்கள் இருக்கிறது..,

நான் கூட திருவொற்றியூர் கூட்டத்தில் தைரியமாக சொன்னேன். நீ அவிழ் மூன்ற, நான் அவிழ்க்கிறேன் மூன்ற. நான் மோசமான ஆளு. இப்படிதான் முதன்முதல் ஜெயலலிதா என்கிட்ட வால் ஆட்டிச்சி. அதன் விளைவு என்ன என்பதை அந்த அம்மா உயிரோடு இருந்தா கேட்டு தெரிஞ்சுக்கோங்க.

இதேபோல்தான் ஆணவமாக பேசினார். அன்னைக்கு ஜெயலலிதா பெரிய தப்பு எதுவும் செய்யல. டான்சி நிலத்தை வாங்கினாங்க. அரசு நிலத்தை வாங்கக் கூடாது. நான் டான்சி நிலத்தை வாங்கியது தவறு என ஒரு அறிக்கை கொடுத்தது. திமுக–வுக்கு ஒரு எம்.எல்.ஏ. கூட கிடையாது. கண்ணுக்கு எட்டியவரை எதிரிகளை காணவில்லை என்று சொன்னார்.

மூன்று பேர்தான் திமுக–வில் வெற்றி பெற்றார்கள். கலைஞர் ராஜினாமா செய்துவிட்டார். இருவர் அவைக்கு சென்றார்கள். அந்த தைரியத்தில் அந்த அம்மா, நான் டான்சி நிலத்தை வாங்கினேன். வாங்கினால் என்ன தப்பு என்று சொன்னார்.

வாம்மா மாட்டினியா நீ என்று சொல்லி., போட்ட வழக்கு சுப்ரீம் கோர்ட் வரை சென்று உள்ளே சென்றார்கள். வாய்க்கொழுப்பு மட்டும் இருக்கக் கூடாது. எந்த கொழுப்பும் இருக்கலாம். வாய்க்கொழுப்பு மட்டும் இருக்கக் கூடாது. அந்த அம்மா பெரிய தப்பு ஏதும் செய்துவிடல. எனக்கு வேண்டாம் என்று அந்த நிலத்தை திருப்பி கொடுத்திருந்தாலம் முடிஞ்சி போச்சு.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேசினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020